1992 ஏப்ரல் 7]

சுற்றுலா மையமான கன்னியாகுமரியில் விமான இறங்குதளம் அமைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்ய அவசியமென்று கருதவில்லை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி இந்தியாவிலுள்ள ஒரு சிறந்த சுற்றுலா மையம். வடநாட்டிலிருந்து ஏராளமான சுற்றுலா பயணிகளும், வி.ஐ.பி.களும் அங்கே வருகிறார்கள். குமரி மாவட்டத்திற்கு விமானம் மூலம் வருகை தருகின்றவர்கள் ஒன்று, 90 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருவனந்தபுரத்திற்கோ அல்லது 250 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மதுரைக்கோ தான் வரவேண்டியிருக்கிறது. எனவே, ஒரு வாயுதூத் விமானம் போக்குவரத்தையாவது அரசு அமைக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்திய விமான நிறுவனமும் வாயுதூத் கம்பெனியும் கன்னியாகுமரி மாவட்டத்திலே அந்த தளம் அமைப்பதற்கு முன் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடம் சுற்றுலாத்தலம் என்பது நம்முடைய அரசுக்கு நினைவிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற வகையில் நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப் பேற்றதற்குப் பிறகு, தூத்துக்குடியிலியேயே விமான தளம் மிக விரைவிலே திறக்கின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், கன்னியாகுமரியில் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

483—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 483

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்,

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

*1248—திரு. என்.ஆர். ராஜேந்திரன் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் அருகில் முட்டம் கிராமத்திலிருந்தும் மயிலாடுதுறை அருகிலுள்ள மணல்மேடு கிராமத்தின் வழியாகவும் கொள்ளிடம் ஆற்றைக் கடக்க ஆற்றின் குறுக்கே போக்குவரத்துப் பேருந்துகள் செல்லும் அளவிற்கு பாலம் ஒன்று கட்டப்படுமா?

(ஆ) நிதிப் பற்றாக்குறை இருப்பின், தரைப் பாலமாவது கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தின் அவசியம் குறித்து நானும் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் திரு. அபுல் ஹசன் அவர்களும் இந்தச் சட்டமன்றத்திலே பெரிய விரிவுரை ஆற்றியிருக்கிறோம், இருந்தும், மாபெரும் திட்டங்களுக்கெல்லாம் ஒப்புதல் அளித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் 'இல்லை' என்ற பதில் எங்களுக்கு வருத்தத்தை அளிக்கிறது. வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் எடுத்துச் செல்லக் கூடிய திட்டத்திற்கு தயாரிக்கப்பட்ட சிமெண்ட் குழாய்கள், ரோடு ஓரங்களிலே உள்ளதால், இப்போது அவைகள் வீடுகளாகவும் மற்ற இடங்களிலே அவசிய மற்றும் கிடக்கின்றன இந்தக் குழாய்களை எடுத்து அருகே ஒரு தரைப்பாலம் அமைப்பதன் மூலம், போக்குவரத்து செல்ல வழி ஏற்படும். இதனால் மிச்சப்படுகின்ற 6,7 லிட்டர் எரி பொருளை அந்தப் பேருந்து உரிமையாளர்களிடமிருந்து கட்டணமாக 10 ரூபாய் வசூலிப்பதன் மூலம், பாலம் அமைப்பதற்கு ஆகும் செலவை நிவர்த்தி செய்து கொள்ளலாம் என்றும் தெரிவித்துக் கொண்டு, இதைப் பரிசீலிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–02

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகின்ற பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ உயர்மட்டப் பாலம் கட்டுவது என்றால் பத்து கோடி ரூபாய் செலவாகும்; தரை மட்டப் பாலம் கட்டுவது என்றால் மூன்று கோடி ரூபாய் செலவாகும். ஆகவே, அதற்கு அருகாமையிலேயே பத்து கிலோ மீட்டர் அருகாமையிலேயே பெரம்பலூர்—மானாமதுரை சாலையில் திருமானூர் அருகே ஓர் உயர்மட்டப் பாலம் இருக்கின்றது. அதற்குப் பின்னால் கும்பகோணம்–தஞ்சாவூர் சாலையிலே அணைக்கரைக்கு அருகே ஒரு இருவழி உயர் மட்டப் பாலம் இருக்கின்றது. இந்த மூட்டம் சாலைக்கும் மணல்மேடு சாலைக்கும் இடையில் குறுக்கிடுகின்ற இந்தக் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டப் படுகின்ற பாலம் எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. ஆகவே, இதனுடைய விலை விகிதப் பட்டியல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே தற்போது இதை எடுத்துச் செய்ய இயலாது என்று அரசு கருதுகிறது.